<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்</u>

அ.வ.எண்.23/2024

பெயர் – ஸ்டெல்லாமேரி(வா.சா.1)

நாள் – 20.02.2026

**<u>3, 4 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை.</u>**

1) பிரபு எனக்கு என்ன உறவு முறை என்றால் எனது தம்பி மகன் ஆவார். 1ம் பிரதிவாதி ஆலீஸ்மேரி எனது அண்ணன் அலெக்ஸ்சான்டர் மனைவி என்றால் சரிதான். பாக்கியபிரதீப் எனக்கு என்ன உறவு முறை என்றால் எனது அண்ணன் மகன் ஆவார். இவ்வழக்கில் என்ன பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளேன் என்றால் 1, 2 பிரதிவாதிகள் உற்பத்தி செய்த உயில் செல்லாது என்று விளம்புகை பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளேன்.(சாட்சி தான் பள்ளி படிப்பு படிக்கவில்லை என்றும், கையெழுத்து போட மட்டும் தெரியும் என்று கூறியுள்ளார்).

2) எனது சகோதரர் ரவிந்திரனின் இறப்பு சான்றிதழ் மற்றும் வாரிசு சான்றிதழை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்னோ என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் தற்போது எங்கு குடியிருந்து வருகிறேன் என்றால் தூத்துக்குடி மாவட்டம் இளையரசனேந்தல் திருமணம் முடிந்து 30 வருடமாக அங்கு தான் குடியிருந்து வருகிறேன். சாத்தூருக்கு அவ்வப்போது தான் வந்து செல்லுவேன் என்றால் கிடையாது, வாரத்திற்கு ஒரு முறை சாத்தூருக்கு வந்துள்ளேன். வழக்கு சொத்து எவ்வாறு பாத்தியப்பட்டது என்றால் நான் தான் எனது பெயரிலும், அக்கா ஞானசௌந்தரி பெயரிலும் கிரையம் பெற்றேன்.

3) எந்த வருடம் வழக்கு சொத்தை கிரையம் பெற்றேன் என்றால் அதுகுறித்து ஞாபகமில்லை. உயில் போலியாக உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டுள்ள நிலையில் எந்த வருடம் உயில் உற்பத்தில் செய்யப்பட்டது என்றால் அதுகுறித்து எனக்கு ஞாபகமில்லை. எனது வாரிசு சான்றிதழ்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பாக்கியபிரதீப்பின் அப்பாவான ரவிந்திரனின் இறப்பு மற்றும் வாரிசு சான்றிதழை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்துள்ளேன்.

4) ஞானசௌந்தரி என்பவர் முதலில் முத்துராஜ் என்பவரை திருமணம் செய்துள்ளார் என்றால் சரிதான். எனது அக்கா ஞானசௌந்தரியும், முத்துராஜும்

ஒன்றாக இருக்கும் போது தான் வழக்கு சொத்தை வாங்கினேன் என்றால் சரியல்ல, இருவரும் விவாகரத்து பெற்ற பின்பு தான் வழக்கு சொத்தை வாங்கினேன். அவர்கள் எந்த வருடம் விவாகரத்து பெற்றார்கள் என்றால் அதுகுறித்து ஞாபகமில்லை. 2ம் பிரதிவாதி வழக்கு சொத்தை பூட்டிவிட்டார் என்றும், அவர் கையில் தான் வீட்டின் சாவி உள்ளது என்றால் சரிதான். வீட்டின் சாவி 2ம் பிரதிவாதியின் கையில் உள்ளதால் அனுபவம் அவரிடமே உள்ளது என்று புலப்படுகிறது என்றால் சரியல்ல. ஞானசௌந்தரி, பாக்கியபிரதீப்பிற்கு பதிவு செய்யப்பட்ட உயில் ஆவணம் 2021ம் வருடம் எழுதி வைத்துள்ளார் என்றால் சரிதான்.

5) 3ம் பிரதிவாதியான சார்பதிவாளர் உரிய ஆவணங்களை பெற்று சட்டவிதிகளுக்கு உட்பட்டு உயிலை பதிவு செய்துள்ளார் என்றும், எனவே நான் தாக்கல் செய்த பிராதானது தள்ளுபடி செய்யப்பட வேண்டிது என்றால் சரியல்ல.